**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள். 17.09.2025

Case No.DOP.98/2023

P.W.1

**திருமதி.கிறிஸ்டி கீர்த்தனா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

எங்கள் இருவருக்குமிடையே பெரியோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு கிறிஸ்தவ முறைப்படி தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்காக பணம், நகை குறித்து பெரியோர்கள் பேசிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். திருமணத்திற்காக எதிர்மனுதாரர் 12 பவுன் நகை, ஒரு லட்சம் ரொக்கம், 2 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை கேட்டார் என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தரப்பினர் எந்த காலத்திலும் சீர்வரிசையாக பணமோ, நகையோ, சீர் சாமானோ கேட்டதில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோரும், அக்காவும் வழக்குரைஞருக்கு இந்த வழக்கு விபரம் குறித்து தெரிவித்தனர் என்றால் சரியல்ல, நான் தான் வழக்குரைஞருக்கு சொன்னேன். நான் அணிந்து சென்ற நகையை எத்தனை பவுன் உள்ளது என்று எதிர்மனுதாரர் எந்த காலத்திலும் என்னிடம் கேட்டதில்லை என்றால் தவறு, கேட்டுள்ளார். எதிர்மனுதாரர் கொடுத்த பதிலை நான் படித்து பார்க்கவில்லை. எங்கள் ஊரில் உள்ள சர்ச்சில் வைத்து தான் எங்கள் இருவருக்கும் திருமணம் நடந்தது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கான செலவை நாங்களும், திருமண வரவேற்பிற்கான செலவை எதிர்மனுதாரர் தரப்பிலும் செய்தோம் என்றால் சரிதான். எனவே, நான் திருமண செலவு அனைத்தையும் எங்கள் தரப்பில் தான் செய்தோம் என்று சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. திருமணமான அடுத்த நாளே நாங்கள் இருவரும் தனிக்குடித்தனம் சென்று விட்டோம் என்றால் சரியல்ல, திருமணம் நடந்த இரண்டு மாதம் கடந்த பிறகு போனோம். திருமணமான சில காலங்கள் நாங்கள் இருவரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம் என்றால் சரியல்ல. மூன்று நாட்கள் தான் சந்தோஷமாக வாழ்ந்தோம். நான் வழக்கிற்காக இவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.09.17 14:58:01 +0530

வீட்டிலிருந்து சுற்றுலாத்தளங்களான கன்னியாகுமரி, உவரி போன்ற இடங்களுக்கு அரை மணி நேரத்தில் சென்று விடலாம் என்றால் அதை விட கொஞ்ச நேரமாகும். ஆனால், அவர் கூட்டிச் சென்றதில்லை. எனக்கு சரியாக சமையல் செய்ய வராது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை சுற்றுலா தளங்களுக்கு அழைத்து சென்றுள்ளார் என்றால் சரியல்ல. திருமணமான ஒன்றரை வருடத்தில் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன். திருமணமான 7 மாதங்கள் கழித்து எனக்கு கரு உருவாகி கலைந்து விட்டது என்றால் சரியல்ல. மாதவிடாய் சிறிது காலம் தள்ளி போயிருந்தது. வயிற்று வலிக்காக ஆஸ்பத்திரிக்கு போனோம். இரண்டு நாட்களில் மாத விடாய் வந்து விட்டது. என்னுடைய உணவு பழக்க வழக்கத்தால் கரு கலைந்து விட்டது என்றால் எதிர்மனுதாரரின் அம்மா இஞ்சியை அரைத்து கொடுத்ததால் கூட அவ்வாறு நடந்திருக்கலாம். எதிர்மனுதாரர் என்னை எங்கும் அழைத்துச் செல்லாமல், பிடித்த உணவை வாங்கித் தராமல், சந்தோஷமாக வைத்துக் கொள்ளவில்லை என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. திருமணமான சில மாதங்களிலேயே எதிர்மனுதாரர் எனக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்று சொன்னதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பந்தல் டெக்கரேசன், சவுண்ட் சர்வீஸ் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னுடைய அத்தியாவசிய தேவைகளுக்கு கூட பணம் கொடுப்பதில்லை என்றும், அவ்வாறு கேட்டால் என் அம்மா வீட்டிற்கு சென்று வாங்கி கொள்ளும்படி அவர் சொன்னார் என்றும் நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நானும் எதிர்மனுதாரரும் தனியாக வாழ்ந்து வந்ததால் அவர் சம்பாதித்த அத்தனை பணத்தையும் என்னிடம் தான் கொடுப்பார் என்றால் சரியல்ல. என்னை திருமணம் செய்யாமல் வேறு ஒரு பொண்ணை திருமணம் செய்திருந்தால் பத்து பவுன் நகை கூடுதலாக கிடைத்திருக்கும் என்று எதிர்மனுதாரர் சண்டையிட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. கூடுதலாக பத்து பவுன் நகை கேட்டதாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய தாலி செயினை எதிர்மனுதாரர் கழற்றி சென்று விட்டதால் அது சம்பந்தமாக நான் வள்ளியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பத்து பவுன் நகை கேட்டதாக நான் சொல்லும் சம்பவம் திருமணமான மூன்று மாதத்தில் நடந்தது. இது சம்பந்தமாக நான் புகார்

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.09.17 14:58:09 +0530

கொடுக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் நான் சொல்வது போல அந்த சம்பவம் நடந்திருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு நடக்காததால் தான் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னிடம் சண்டையிட்ட பிறகும் அவருடன் எதிர்காலம் கருதி மன வேதனையுடன் சேர்ந்து வாழ்ந்ததாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனது மனுவிலும், என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் என்னுடைய வயது 23 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வீட்டில் இல்லாத சயமங்களில் எனது பெற்றோரிடமும், எனது சகோதரிடமும் மணிக்கணக்கில் செல்போனில் பேசி வந்தேன் என்பதால், அவர்களுடைய துர்போதனையின் பேரில் நான் எதிர்மனுதாரருடன் வாழவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு எந்த கெட்ட பழக்கமும் கிடையாது என்றால் அவர் குடிப்பார். எதிர்மனுதாரருக்கு குடிப்பழக்கம் உள்ளது என்று எனது மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அவரது சகோதரி விட்டிற்கு அழைத்துச் சென்றார் என்றால் சரிதான். அங்கு இரண்டு நாட்கள் தங்கினோம். என்னை அங்கேயே விட்டு விட்டு எதிர்மனுதாரர் வேலைக்கு சென்று விட்டதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இரண்டு நாட்களும் என்னுடனேயே தங்கியிருந்து என்னை நல்ல முறையில் வீட்டிற்கு அழைத்து கொண்டு வந்தார் என்றால் சரியல்ல.

மேலும், குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2025.09.17 14:58:15 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.